



# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் : 42

## அறிவிப்புகள்
## 2024 – 2025

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 42**

# அறிவிப்புகள்
# 2024 - 2025


**திரு. இ. பெரியசாமி**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் **15** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. இ. பெரியசாமி**

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

## 1. ஊராட்சி மன்றங்களுக்காக 500 கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

ஊராட்சி மன்றங்களுக்கான கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்கள் மற்றும் கிராம செயலகங்கள் கடந்த மூன்றாண்டுகளாக கட்டப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில், பழுதடைந்த நிலையில் உள்ள 500 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு நிதியுடன் ஒருங்கிணைந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ.30 இலட்சம் வீதம் மொத்தம், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 2. புதிதாக 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கட்டப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த பழைய அலுவலகக் கட்டடங்களுக்கு பதிலாக ஆண்டுதோறும் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை, 290 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 728 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் தலா 6.00 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் கூறு நிதியில் கட்டப்படும்.

## 3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டப்படும்.

ஊரக வளர்ச்சி அலுவலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.104.47 கோடி செலவில் 15 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியில் கட்டப்படும்.

## 4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திட்ட இயக்குநர்களுக்கு ஐந்து முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் புதிதாக கட்டப்படும்.

2024-25 ஆம் ஆண்டில், திருவாரூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் திட்ட இயக்குநர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் தலா 2 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப் பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியின் கீழ் புதிதாக கட்டடப்படும்.

## 5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பணிகளை கண்காணிக்க 480 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை தொடர்ந்து கண்காணித்திடவும், தரத்தினை உறுதி செய்யும் பொருட்டும் ஊரக வளர்ச்சித் துறை கள அலுவலர்களுக்கு ரூ. 44 கோடி மதிப்பீட்டில் 480 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

## 6. 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களில் கசிவுநீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களைப் பாதுகாத்து, மேம்படுத்திடும் பொருட்டு கசிவுநீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 7. 5,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தானியங்கி முறையில் இயக்கப்படும்.

2024-25 ஆம் ஆண்டில், 15-வது மத்திய நிதிக்குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட கூறு (குடிநீர் வழங்கல்) மற்றும் இதர நிதிகள் மூலம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5,000 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள், இணையம் மூலம் தானியங்கி ஆன்/ஆப் இயக்க அமைப்புகள் நிறுவப்படும்.

## 8. பத்து மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

கிராமப் புறங்களில் சுகாதாரமான முறையில் மலக்கழிவுகளை அகற்றும் நோக்கில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 10 புதிய மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் (Faecal Sludge Treatment Plant) ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 9. ஊரகப் பகுதிகளில் 10 எரிவாயு தகன மேடைகள் கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளில் அனைத்து சமூகத்தினரும் பயன்பெறும் வகையிலும், சமத்துவம் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 2024-25 ஆம் ஆண்டில், 10 எரிவாயு தகன மேடைகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியின் கீழ் கட்டப்படும்

## 10. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1100 குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் குழந்தை நேய வகுப்பறைகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் கட்டப்பட்டு வருகின்றன. 2024-25 ஆம் ஆண்டில் ரூ.168 கோடி மதிப்பீட்டில் 1100 புதிய குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும்.

## 11. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ரூ.60 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெருமளவில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. 2024-25 ஆம் ஆண்டிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 12. ஊரகப் பகுதிகளில் 500 அரசுப் பள்ளிகளில் ரூ.100 கோடியில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள 500 அரசுப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 13. ஊரகப்பகுதிகளில் 500 சிறு பாலங்கள் மொத்தம் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், ஊரக சாலைகளில் குறுக்கே செல்லும் ஓடைகள் மற்றும் வடிகால்கள் மேலாக 500 சிறுபாலங்கள் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

## 14. ஊரகப்பகுதிகளில் முழு நேரம் இயங்கும் 500 நியாய விலைக்கடைகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ஊரகப்பகுதிகளில் மக்கள் உணவு தானியப் பொருட்களை எளிதில் வழங்கும் பொருட்டு, முழு நேரம் இயங்கும் 500 நியாய விலைக்கடைகள், மொத்தம் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 15. ஊரகப்பகுதிகளில் 5000 புதிய சிறு குளங்கள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரகப்பகுதிகளில் மழை நீரை சேகரித்து வேளாண் பணிகளை மேம்படுத்தவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 5000 புதிய சிறு குளங்கள் மொத்தம் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.